# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




**மன்னா – 11 ஏப்ரல் 2021 பிரதி – 1**



# ஆயர் மடல்



சிலுவையிலே தன்னை ஒப்புக்கொடுத்து நம்மை மீட்ட இரட்சகர் இயேசுவின் திருப்பெயரின் அன்பின் வாழ்த்துக்கள்.

ஆயர் மடல், அருளுரை, அறிவிப்புகள், திருமறைக் கேள்விகள், சபை கணக்குகள் என அனைத்து திருச்சபை நிகழ்வுகளையும் தொகுத்து இறை மக்களுக்கு நமது திருச்சபையின் பாலைவன மன்னா 10 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. கொடிய வைரஸ் தாக்கத்தின் காலங்களில் digital நிலையில் வெளிவர கர்த்தர் உதவிசெய்தார். கடந்த ஆண்டிலும் ஜெபித்தவர்கள் சிரமம் பாராது எந்த எதிர்பார்ப்புமின்றி, தட்டச்சு செய்தவர்கள், ஒருங்கமைப்பு செய்தவர்கள், பிரதியெடுத்தவர்கள், புத்தகமாக உருவாக்கினவர்கள், தங்கள் தாலந்துகளால் பங்களிப்பு செய்தவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களும் பாராட்டுகளும் நன்றிகளும் உரித்தாக்குகிறேன். கர்த்தர் தாமே தொடர்ந்து வழிநடத்துவாராக.

ஆலயம் ஆண்டவர் வாசம்பண்ணும் இடம், ஆலயம் ஆண்டவரை பணிந்துகொள்ளும் இடம். ஆலயம் ஆன்மீக வாழ்வில் நம்மை உருவாக்கும் இடம், ஆலயம் நம்மை உணர்த்தும் இடம், ஆலயம் நம்மை செப்பனிடும் இடம் என்னும் உணர்வுள்ள இதயத்தோடு நம்முடைய ஆலயம் என்று ஆலயத்தின் மீது அன்போடும், நமக்கான ஆலயம் என்று ஆலயத்தின் மீது கரிசனையோடும், நாம் ஆலயத்தின் உறுப்பினர்கள் என்னும் பொறுப்போடும் செயல்பட போதகர் என்னும் நிலையில் இறை இயேசுவின் திருப்பெயரில் வலியுறுத்துகிறேன்.

கொரோனா வைரஸ் 2-ம் அலை, 3-ம் அலை தாக்கம் மக்களை பாதிக்காதவாறு அதிகமாக அரசு வலியுறுத்தும் கட்டுபாடுகளை பின்பற்றி நடப்போம்.

தவக்காலங்களை கடந்து உயிர்த்தெழுதலின் நாட்களில் காலடி எடுத்து வைக்கிறோம். உயிர்த்தெழுதல் நாட்கள், இறை ஆற்றல் நம்மில் உயிர்க்கும் நாட்களாகவும் இறை இயேசுவில் நம்மை நிலைநிறுத்தும் நாட்களாகவும் அமைவதாக.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான நிகழ்வுகள் உலகெங்கும், ஏன் நம்முன்னும் நிகழ்ந்து கொண்டிருப்பதைக் காண்கிறோம். போட்டி, பொறாமை, சுயநலம், அன்புஇன்மை, விட்டுக்கொடுக்காமை, கொள்ளைநோய், கொலைகள், கொள்ளைகள், பூமியதிர்ச்சி, விபத்துக்கள்….. பாரத்தோடு ஜெபிப்போம்.

உயிர்த்தெழுதல் பண்டிகை நல்வாழ்த்துக்களை போதகர் குடும்பத்தின் சார்பில் சபைமக்கள் அனைவருக்கும் அன்போடு தெரிவிக்கிறேன். உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆசி உங்களை வழிநடத்துவாராக.


**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

## ஆயர் அருளுரை

## இச்சையடக்கமும், சிலுவை வழி சிந்தனையும்

கிறிஸ்துவில் பிரியமானவர்களே!

இந்த மாத சிந்தனை இச்சையடக்கமும், சிலுவை வழி உயிர்த்தெழுதல் சிந்தனையும்.




சிலுவையிலே நமது பாவ இச்சைகளை அறைவதற்கு ஒப்புக்கொடுத்து கிறிஸ்துவிலே உயிர்த்தெழும் ஆற்றலை பெற்றுக்கொள்வதே கிறிஸ்தவ வாழ்வின் மிக ஆழமான புரிந்துகொள்ளுதல் ஆகும்.

கலாத்தியர் 5:24-ல் அப்போஸ்தலராகிய பவுல் கூறும்போது, “கிறிஸ்துவினுடையவர்கள் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்” என்கிறார். மாம்ச இச்சைகள் சிலுவையில் அறையப்படும்போதுதான் கிறிஸ்துவில் உயிர்த்தெழும் அனுபவம் நமக்குள் எழுகிறது.

### இச்சை ஓர் பரீட்சை:-

இச்சை நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் ஓர் சோதனை (பரீட்சை) (Test). பொதுவாக சோதனையில் வெற்றிபெறுபவன்தான் வெற்றியாளன். ஆனால் சுய இச்சையினால் சோதிக்கப்படுகிறான் எனத் திருமறை கூறுகிறது. “அவனவன் தன் தன் சுய இச்சையினால் இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்” (யாக். 1:14).

தன்னைத் தானே சோதிக்கிற மனிதர்கள் தங்கள் சுய இச்சையின்படி செய்து கர்த்தரையும் சோதித்தார்கள் என திருமறை கூறுகிறது.

"வனாந்தரத்திலே இச்சையுள்ளவர்களாகி அவாந்தரவெளியிலே தேவனை பரீட்சை பார்த்தார்கள்" (சங்கீதம் 106:14). "தங்கள் இச்சைக்கேற்ற போஜனத்தைக்கேட்டு, தங்கள் இருதயத்தில் தேவனை பரீட்சை பார்த்தார்கள்" (சங்கீதம் 78:18).

சுயஇச்சை தேவனை பரீட்சை பார்க்கும் அனுபவத்திற்கு அவர்களை தள்ளியது. இஸ்ரவேல் மக்களிடம் பெற்றுக்கொண்ட ஆசிகளுக்காக நன்றியோடு இருப்பதை மறந்து தங்கள் இச்சைக்கேற்ற உணவுகளுக்காக ஆண்டவரை பரீட்சை பார்த்ததினால் அழிவின் விளிம்பில் சென்றார்கள்.

இன்றைக்கும் நாம் பெற்றிருக்கும் ஆசிகளை நோக்குவோம். நன்றி கூறுவோம். இன்னும் ஆசை இச்சைகளுக்காக இறை தண்டனைக்கு ஆளாகாமல் காத்துக்கொள்வோம்.

## இச்சை ஓர் பிரிவு:-

இச்சை பிரிவை ஏற்படுத்தியிருக்கிறது. படைத்த ஆண்டவருக்கும், நமக்கும் பிரிவை ஏற்படுத்துகிறது. தனிமனிதர்களுக்குள்ளே பிரிவை ஏற்படுத்துகிறது. குடும்பங்களுக்குள்ளே பிரிவை ஏற்படுத்துகிறது. அதுமட்டுமல்ல பிரிந்து செல்லுகிறவன் மேலும் சுய இச்சையின்படி செய்வதற்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறான்.

"பிரிந்துபோகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான். எல்லா ஞானத்திலும் தலையிட்டுக்கொள்ளுகிறான்" (நீதி. 18:1).

இச்சையுள்ளவன் கடவுளோடு இணைந்திருக்க இயலாது. எனவேதான் தன் இச்சைகளை சிலுவையில் அறைந்திருப்பதாக பவுல் அப்போஸ்தலன் குறிப்பிடுகிறான்.

"கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன், இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் (கலாத்தியர் 2:20). இச்சையடக்கத்தோடு மட்டுமே இறைவனோடு நாம் பயணிக்கமுடியும்.

## இச்சை ஓர் பாவம்:-

“இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்” (யாக். 1:15).

இச்சை பாவத்தைப் பிறப்பிக்கும் ஒன்று. மனித வாழ்வில் இச்சையோடு பார்த்தாலும் பாவம் என இயேசு கிறிஸ்து குறிப்பிடுகிறார்.

“ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று” (மத். 5:28). எனவேதான் இச்சையடக்கம் மனிதனுக்கு மிகவும் அவசியம் என்பதை திருமறை தெளிவுப்படுத்துகிறது.

“நீங்கள் சுய இச்சைகளின்படி பாவத்திற்கு கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தை பாவம் ஆளாதிருப்பதாக” (ரோமர் 6:12).

சுயஇச்சை பாவத்தைக் கொண்டுசேர்க்கும் என்பதின் வெளிப்பாட்டை பவுலடியார் குறிப்பிடுவதைக் கண்டுகொள்ள முடிகிறது.

## இச்சையடக்கம் ஓர் கனி:-

“ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை” (கலாத். 5:22,23).

ஆவியின் கனிகளில் ஒன்பதாவது கனியாக இச்சையடக்கம் திருமறை குறிப்பிடுவதை நாம் காணமுடிகிறது. நம்மிலே செயல்படுத்தப்படவேண்டிய கனிகளில் இச்சையடக்கமும் முக்கிய கனியாகும்.

## இச்சையடக்கம் ஓர் அழிவில்லா கிரீடம்:-

“பந்தயத்துக்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாய் இருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தை பெறும்படிக்கு அப்படி செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தை பெறும்படிக்கு அப்படி செய்கிறோம்” (1கொரி. 9:25).

பிரியமானவர்களே! இச்சையடக்கம் உலகப்பிரகாரமாக கிரீடம் தேடித்தரும் என எல்லோருக்கும் தெரியும். ஆனால் நாம் இச்சையடக்கமாய் இருப்போமென்றால் அழிவில்லாத நித்திய வாழ்வின் கிரீடத்தை பெற வழிவகுக்கும் என திருமறை வழிகாட்டுகிறது.

## இச்சையடக்கம் ஓர் தூய பண்பு:-

"இச்சையினால் உலகத்துக்குண்டான கேட்டுக்குத் தப்பி திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு........ ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும்.... அன்பையும் கூட்டி வழங்குங்கள்" (2பேதுரு 1:4,5).

இச்சையடக்கம் திருமறை காட்டும் தூய பண்பு என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.

இந்த பண்புகளும், கனிகளும் இயேசு நாதருக்கு உன்னத இடத்தை தந்தது. சிலுவையிலே தன்னை ஒப்புக்கொடுத்து உயிர்த்தெழுதலின் முதல் கனியாய் மாறினார். உயிர்த்தெழுதலின் அனுபவம் வெளிப்பட வேண்டுமாயின் நம் ஆசை இச்சைகளை சிலுவையில் ஒப்புக்கொடுக்கும் அனுபவம் வேண்டும் என்பதே உண்மை. எனவே சிலுவை சிந்தனையோடு உயிர்த்தெழுதலை நோக்கிப் பயணிப்போம். ஆண்டவர்தாமே உங்களை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்!

இறைமக்கள் அனைவருக்கும் போதகர் குடும்பத்தின் சார்பில் உயிர்த்தெழுதல் நல்வாழ்த்துக்கள்.

**அன்புடன் போதகர்**
**Rev. Dr. N. ஜெசின்**

# சிறுவர் பகுதி

## பழையன ஒழிந்தன எல்லாம் புதிதாயின

**"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி. 5:17).**

ஒரு ராஜ அரண்மனையில் ஒரு அறிவிப்பு செய்தார்கள். அதன்படி ஒரு பெரிய விருந்து அரண்மனையில் ஆயத்தப்படுத்தப்பட போவதாகவும், அரச உடை அணிந்திருப்பவர்கள் நாளை நடக்கும் அந்த விருந்தில் கலந்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதை ஒரு பிச்சைக்காரன் கேள்விப்பட்டான். அவனுக்கு அந்த விருந்தில் எப்படியாவது கலந்துகொள்ளவேண்டும் என்கிற ஆசை எழுந்தது. ஆனால் தான் உடுத்தியிருந்த அழுக்கான கந்தையான உடைகளை பார்த்ததும் அவனுக்கு துக்கம் வந்தது. நல்ல அரச குடும்பத்தினர் மாத்திரமே அந்த விருந்தில் கலந்துகொள்ளமுடியும் என்று அவன் நினைத்து பெருமூச்சு விட்டான்.

திடீரென்று ஒரு எண்ணம் உதித்தது. தான் அதை எப்படி நிறைவேற்றப்போகிறோம் என்று நினைத்தபடியே, அவன் அரண்மனையின் வாயிலுக்கு முன்பாக சென்று, அங்கிருந்த வாயிற்காப்போனிடம், தான் அரசனை காண விரும்புவதாக கூறினான். அந்த காவலன், சற்று நேரம் காத்திருக்கும்படி கூறி உள்ளே சென்று திரும்ப வந்து, அவனை உள்ளே அனுமதித்தான். உள்ளே சென்ற பிச்சைக்காரனிடம் அரசர், 'நீ என்னை காணவேண்டும் என்றாயா?' என்று கேட்டார். அதற்கு அவன் ஆம் அரசே, நான் நீங்கள் கொடுக்கும் விருந்தில் கலந்துகொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் எனக்கு அதற்கு அரச உடுப்பு இல்லை. உங்களுடைய பழைய உடுப்பு ஏதாவது இருந்தால் எனக்குக் கொடுப்பீர்களா? நானும் விருந்தில் கலந்துகொள்வேன் என்று தைரியமாகக் கேட்டான். அதைக் கேட்ட அரசர் புன்னகையுடன் நல்லது என்னிடமே நீ கேட்டாயே என்றுக் கூறி, தம்முடைய இளைய குமாரனிடம் உன்னுடைய அறைக்குக் கூட்டிச்சென்று உன்னுடைய உடைகளில் ஒன்றை இவனுக்குக் கொடு என்று கூறினார்.



இளவரசன் தன்னுடைய உடைகளில் ஒன்றை எடுத்து கொடுத்து, பிச்சைக்காரனை அணிவிக்கச் செய்தார். அதை அணிந்த பிச்சைக்காரனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. கண்ணாடிக்கு முன் நின்று, அதையே பார்த்துக் கொண்டிருந்த பிச்சைக்காரனிடம் இளவரசர், "நீ அணிந்திருக்கிற இந்த உடையுடன் நாளை விருந்தில் கலந்துகொள், வேறுஉடை எதுவும் உனக்கு வேண்டாம், இந்த உடை நீ உயிருடன் இருக்கும்வரைக்கும் போதுமானது" என்று கூறினார். அதைக் கேட்ட பிச்சைக்காரன் இளவரசரின் கால்களில் விழுந்து, நன்றி கூறி திரும்ப செல்லும்போது தன்னுடைய பழைய கந்தல் உடைகளை கண்டு, ஒரு வேளை இளவரசர் தன்னுடைய உடைகளை மீண்டும் கேட்டால் என்று நினைத்து, அந்த கந்தையை தன்னுடன் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். அடுத்தநாள் விருந்தில் கலந்துகொண்ட பிச்சைக்காரன் அவன் வாழ்வில் கண்டிராத அளவு மிகவும் அருமையான உணவு வகைகளையும், பழங்களையும், இனிப்புகளையும் கண்டான். ஆனால் அவன் அதை சந்தோஷமாய் அனுபவிக்க முடியவில்லை. ஏனென்றால் அவன் தன்னுடைய கந்தையை ஒரு துணியில் சுற்றி அதை தன் மடியில் வைத்திருந்தான்.

உணவு வரும்போது அதை எடுக்க முற்படும்போது, அவன் மடியில் இருந்த கந்தை கீழே விழுந்ததால் அவன் விதவிதமான உணவு வகைகளை ருசிக்க முடியாமற்போனது. இளவரசர் சொன்னதுபோல, அவர் கொடுத்த உடை எப்போதும் அவனுக்கு போதுமானதாக இருந்தது.


அவனுக்கோ தன் கந்தையின்மேல் இன்னும் மோகம் இருந்தபடியால் அதை அவன் விடவேயில்லை. எங்கு அவன் சென்றாலும் அந்த கந்தையை தன்னுடன் கொண்டு சென்றான். அதனால் அவனை கண்ட மக்கள் அவனை 'கந்தைகளோடு உள்ள வயோதிபன்' என்று அழைக்க ஆரம்பித்தனர். ஒருநாள் அவன் மரணபடுக்கையில் இருந்தான். அவனைக் காண அரசர் வந்தார். அவரது முகத்தில் அவன்தன் அருகில் வைத்திருந்த கந்தையை கண்டபோது சோகம் வந்தது. எத்தனை அருமையான உடை இருந்தும் தன் கந்தையை அவன் விடவே இல்லையே என்று சோகத்துடன் அவர் கடந்துசென்றார். அதைக் கண்ட அந்த பிச்சைக்காரன் இளவரசர் தன்னிடம், 'இந்த கந்தையை விடாதிருந்தால் தாம் கொடுத்த ராஜ உடையை இழக்க வேண்டியதாயிருக்கும்' என்று கூறினதை நினைவுகூர்ந்து, தான் செய்த தவறை நினைத்து அழுதான். ஆனால் அது மிகவும் காலம் கடந்ததாயிருந்தது.

நாமும் கூட அரச விருந்திற்கு அதாவது தேவனுடைய குடும்பத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் அந்த விருந்தில் கலந்துகொள்ள வேண்டுமென்றால், நம்முடைய அழுக்கான கந்தையாகிய பாவங்களை நம்மை விட்டு அகற்றி, தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து கொடுக்கும் இரட்சிப்பின் வஸ்திரத்தை அணிந்திருக்கவேண்டும். இரட்சிப்பின் வஸ்திரத்தை அணிந்துகொண்ட பிறகு பழைய கந்தையான அழுக்கான பாவங்களை நிச்சயமாய் விட்டிருக்கவேண்டும். அதை நாம் தொடர்ந்து பிடித்துக்கொண்டு இருப்போமானால், நாம் நிச்சயமாக கர்த்தருடைய விருந்தில் கலந்துகொள்ள முடியாது. இரட்சிப்பின் வஸ்திரம் இருந்தால்தான் நாம் பரலோகம் செல்லமுடியும். "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின' என்ற வசனத்தின்படி, நாம் புதிதாக்கப்பட்டவர்களாக நம்முடைய வாழ்க்கை புதியதாக மாறவேண்டும். பழைய பாவ பழக்கவழக்கங்கள் நம்மை விட்டு முற்றிலும் அகற்றிவிட்டு, புதிதாய் பிறந்த குழந்தையை போல நாம் கர்த்தருக்குள் வளர தேவன்தாமே கிருபை செய்வாராக! ஆமென் அல்லேலூயா!

**அன்புடன் போதகர்**

## மகளிர் பகுதி

# இன்றும் என்றும் ஜீவிக்கிறார்




“அவன் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிர்த்தெழுந்தார்; அவர் இங்கேயில்லை, இதோ அவரை வைத்த இடம்” – மாற்கு 16:6

பெண்கள் சங்கத்தின் சார்பில் உயிர்த்தெழுதல் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆசி உங்களை நிரப்புவதாக.

இந்நாளில் உயிர்த்தெழுதலின் சிந்தனையை இதழின் தலைப்பு சார்ந்து சுருக்கமாக தியானிப்போம்.

மூன்று மனிதர்கள் மற்றவர்களுக்கு விரோதமாக குற்றம் செய்தார்கள் என்று விசாரிக்கப்பட்டார்கள். இருவர் தவறு செய்திருந்தனர். ஒருவர் எந்த தவறும் செய்யவில்லை. மூன்று பேரும் அரசாங்கத்தால் விசாரிக்கப்பட்டனர். இருவருக்கு அவர்கள் செய்த குற்றத்திற்கு சரியான தண்டனை விதிக்கப்பட்டது. ஒருவருக்கு சரியான தீர்ப்பு வழங்கப்படவில்லை. மூன்று பேருக்கும் சிலுவை சுமக்க கொடுக்கப்பட்டது. இருவர் அதை சுமக்கும்படி தவறு செய்திருந்தனர். ஒருவர் அதை சுமக்கும் அளவு எந்த தவறும் செய்யவில்லை.

மூன்று பேரையும் கிண்டல்செய்து அவர்கள்மேல் துப்பினர். இருவர் திரும்ப திட்டி, சபித்து, அவர்கள்மேல் திரும்ப துப்பினர். ஒருவர் அமைதியாக எல்லாவற்றையும் சகித்துக்கொண்டார். மூன்று பேரையும் சிலுவையில் ஆணிகளால் அறைந்தார்கள். இருவர் அதற்கு பாத்திரராயிருந்தார்கள். ஒருவர் அதற்கு எந்தவிதத்திலும் பாத்திரராயிருக்கவில்லை. மூன்றுபேரும் சிலுவையில் தொங்கும்போது பேசினர். இருவர் வாக்குவாதம் செய்தனர். ஒருவர் அப்படி வாக்குவாதம் செய்யவில்லை. மூன்றுபேரும் மரணம் வரும் என்று நிச்சயித்திருந்தனர். இருவர் அதை எதிர்த்தார்கள். ஒருவர் எதிர்க்கவில்லை. மூவரும் சிலுவையில் மரித்தார்கள். மூன்று நாட்கள் கழித்து இருவருடைய கல்லறைகளில் அவர்களுடைய உடல் இருந்தது. ஒருவருடைய உடல் அங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார். இயேசு

கிறிஸ்து தமக்கு வந்த எந்த துன்பத்திலும் வாய் திறவாமல் எல்லாவற்றையும் சகித்து நமக்காக சிலுவை சுமந்து வாங்கி தந்த இரட்சிப்பிற்காக ஆண்டவருக்கு நன்றி சொல்வோம்.

உலகத்திலே வந்த எந்த மனிதனிலும், மனிதனாய் உலகத்தில் வந்து அவதரித்த தெய்வமாகிய கிறிஸ்துவே மரித்து உயிர்த்தெழுந்து இன்னும் ஜீவிக்கிறவராக இருக்கிறார். அவர் ஜீவிப்பதால் நாம் ஜீவிக்கிறோம். அவர் ஜீவிப்பதால் நாளைய தினம் குறித்து கவலையோ பயமோ நமக்கு இல்லை. ஏனென்றால் நம்முடைய எதிர்காலமும், நம்முடைய வாழ்க்கையும் அவருடைய கரத்தில் இருக்கிறது.

அதனால் நாம் வாழுகிற வாழ்க்கைக்கும் பிரயோஜனமுண்டு. நாம் நமக்கு வருகிற எந்த பிரச்சனைகளைக் குறித்தும் கலங்கி தவிக்கவேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய வாழ்க்கை அவர் கரத்தில் இருப்பதால் அவர் அந்த பிரச்சனைகளுக்கு தீர்வை நமக்குத் தருவார். நாம் விசுவாசத்தோடு அதை அவரிடம் கேட்கவேண்டும். அப்போது அவர் நமக்கு நன்மையாய் எல்லாவற்றையும் மாற்றித் தருவார். அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28). இந்த சத்தியம் நம் உள்ளத்தில் ஆழமாக பதிந்துவிட்டால் போதும், நம்மை எதுவும் யாரும் அசைக்கமுடியாது. எல்லாம் நன்மையாக என் இயேசு மாற்றி விடுவார்.

**தாங்கொண்ணா துன்ப துயரங்கள்,**

**தவிக்க வைக்கும் சூழ்நிலைகள்,**

**எல்லாம் என் நன்மையாக என் இயேசு மாற்றிடுவார்.**

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## துக்கம் பகிர்வோம்

### கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் **திரு. ஜெரி சத்யா** அவர்களின் தகப்பனார் **Rt. Evt. Sathyanesan** அவர்கள் மார்ச் மாதம் 14-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். தங்கள் தகப்பனாரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

## ஆன்மீகம் தழைக்கட்டும்



மண்ணில் : 21.04.1783
விண்ணில் : 03.04.1826
ஊர் : மால்பாஸ், செஸ்ஷயர்
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : இந்தியா

“தூய, தூய, தூயா, சர்வ வல்ல நாதா…” இப்பாடல் உங்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். ஆன்மீக உணர்வுகளைத் தட்டி எழுப்பும் அற்புத பாடல் இது.

இப்பாடலை இயற்றியவர் பிஷப் ஹீபர். இளமையிலேயே கவிநயத்தை கடவுளின் நாம மகிமைக்காக பயன்படுத்தியவர். இவர் எழுதிய 11 பாடல்கள் ஆங்கிலத் திருச்சபையின் பாடல் புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன.

சபைகுருவாக பயிற்சிபெற்று நல்லதொரு ஆயராக ஐரோப்பாவின் பல இடங்களுக்கு சென்று அருமையான பிரசங்கங்களை செய்து அநேகரை ஆண்டவருக்குள் வழிநடத்தினார்.

1823-ம் ஆண்டு இந்தியாவிற்கு பேராயராக அபிஷேகம் பண்ணப்பட்டு மிகுந்த ஆவலுடன் புறப்பட்டு வந்தார். 1823-ம் ஆண்டு, ஜுன் மாதம் 1-ம் தேதி லாம்பர்த் அரண்மனையில் அபிஷேகம் செய்யப்பட்டார். பின்னர், நாட்டின் பல பாகங்களுக்கும் சுற்று பயணம் மேற்கொண்டார். சென்ற இடங்களிலெல்லாம் திடப்படுத்தல் ஆராதனைகளை நடத்தி அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.

சென்னையில் வேப்பேரி என்ற இடத்தில் ஆலயம் ஒன்றைக் கட்டினார். தமிழ் மொழியிலேயே யாவரும் புரிந்துகொள்ளும்வண்ணம் கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தார். குறைந்த நாட்களில் மிகுந்த சாதனைகளைச் செய்தார். சிறந்த கிறிஸ்தவ பக்தராக, சுவிசேஷ வாஞ்சை படைத்தவராக, சிறந்த கவிஞராக மக்கள் உள்ளத்தை கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்தும் நல்ல ஆயராக, தனது பணிகளை செவ்வனே நிறைவேற்றினார்.

வயது 44, ஏப்ரல் 3-ம் நாள், 1826-ஆம் வருடம், அகிலமெங்கும் சென்று அற்புதமான பாடல்களால் அரும்பணியாற்ற ஆவல் கொண்டிருந்த ஹீபரின்

இதயம் துடிக்க மறுத்தது. மக்களை துக்கத்தினுள் ஆழ்த்தி தூயாதி தூயவரின் சர்வ வல்ல நாதரின் பாதம் சேர்ந்தார். திருச்சிராப்பள்ளியில் இவர் நினைவு கல்லூரியும், உயர்நிலை பள்ளிகளும், சென்னையில் விடுதியொன்றும் இவர் புகழை அறிவித்துக் கொண்டிருக்கின்றன.

அன்பரே! காலம் முடிவதற்குள் உம் பணி பெருக வேண்டாமா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:-** பாவக் கண்ணால் உந்தன் மாண்பை காண யார் வல்லோர்? நீரே தூயர் தூயர் - ரெஜினால்டு ஹீபர்

**குயவனின் கரங்களில்:-** ஆண்டவரே! நான் உமக்குள் வளரவும், பிறரையும் உமக்குள் கொண்டு வரவும் ஆயத்தமாயிருக்கிறேன்.

**தியானத்திற்கு:- எண். 17-18, நீதி. 13, கலாத். 3-4**

## நிகழ்வும் பாடமும்

1. பத்து வருடத்திற்குள் சுமார் ஏழு mobile மாற்றுகிறோம். பத்து வருடத்திற்கு ஒரு Bible தான் (அடிக்கடி கையில் எடுப்பதில்லை).
2. ஒரு mobile-ல் என்ன இருக்கிறதென்று தேடத் தெரியும். Bible-ல் என்ன இருக்கிறது எனத் தேடத் தெரியாது (தெரிந்தால் வெற்றி).
3. ஒரு mobile-க்கு அழகான கவசம் போடத் தெரிந்தவர்களுக்கு, தன் Bible-க்கு கவர்போட ஏனோ தெரிவதில்லை (கவனயீனம்).
4. Mobile எப்பவும் கையிலும், பையிலும் இடம் பிடிக்கும். Bible எப்பவும் மூடப்பட்ட அலமாரியில் இருக்கும் (தரம் தெறியாமை)
5. ஒரு mobile பற்றி 40 விளக்கம் தெரியும். Bible-ல் ஆறுதலாய் பேச 4 வசனம் தெரியாது (ஜீவ வாழ்வை அறியாமை).
6. ஆலயத்துக்கு Bible கொண்டுவர வெட்கம். mobile கொண்டுவருவது பெருமையா? (அறிவியில் பலவீனம்).
7. விலையுயர்ந்த mobile வாங்க யோசிப்பதில்லை. தரமான ஒரு Bible வாங்க யோசனையா? (அழிவுக்கு செலவு).
8. பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள் என்று அறிய mobile வாங்கிக்கொடுக்கிறது நல்லது. அவர்கள் எங்கு போகவேண்டுமென்பதற்கு ஒரு Bible வாங்கிக் கொடுக்கலாமே (சிறந்த பெற்றோர்).

9. கொஞ்ச நேரம் mobile கையில் இல்லையென்றால் கவலைதான். ஒருநாள் முழுதும் Bible-ஐ தொடவில்லையே என்று கவலைப்பட்டதுண்டா? (கடவுள் கவனிக்கிறார்).

அன்பான தேவ பிள்ளைகளே! தயவுசெய்து மேலே கண்ட வார்த்தைகளை உற்றுக்கவனித்துப் பாருங்கள். வேதவசனம் (Bible) (வார்த்தை) எவ்வளவு உண்மை என்று உணர்வீர்கள்.

## தேவ மகிமையை இழக்க செய்யும் கேடுகள்

அப்போஸ்தலனாகிய பவுல் சத்தமிட்டு, நீ உனக்கு கெடுதி ஒன்றும் செய்து கொள்ளாதே நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றார். பவுலைப் பார்க்கிலும் பெரியவரான இயேசு கிறிஸ்து அன்போடு நம்மை நோக்கிப் பார்த்து "உனக்கு கெடுதல் ஒன்றும் செய்து கொள்ளாதே" நான் உன்னுடனே கூடத்தான் இருக்கிறேன் என்கிறார்.

நம்முடைய பிரச்சனைகள் எவ்வளவு பெரிதாய் இருந்தாலும் கர்த்தர் அதை பனிபோல் நீங்கச் செய்ய வல்லவராய் இருக்கிறார். மனிதன் தன் சரீரத்திற்கு செய்கிற கெடுதல் உண்டு, சபைக்கு செய்கிற கெடுதல் உண்டு, தேசத்திற்கு செய்கிற கெடுதல் உண்டு.

இன்று கர்த்தர் பலத்த சத்தத்தோடு என் மகனே! என் மகளே! நீ உனக்கு கெடுதல் ஒன்றுஞ்செய்து கொள்ளாதே என்று சொல்லுகிறார்.

### 1. இச்சைகளினால் வரும் கேடு:-

"இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2பேதுரு 1:4).

இச்சைகள் மனிதனுடைய சிந்தையில் உருவாகின்றன. அவனுடைய உள்ளத்திற்குள் வருகிறது. அது கட்டுப்படுத்தப்படவில்லையென்றால் அவன் தேவ பிரசன்னத்தை இழந்து தலைகுனிந்து நடக்கிறான். "அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பம் தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்" (யாக்கோபு 1:14,15).

ஆகவே நாம் ஒவ்வொரு நாளும் நம்முடைய சரீரத்திலே கிரியை செய்கிற இச்சைகளுக்கு விரோதமாய் ஜெபிக்கவேண்டும். காலையில் எழும்பி நம் அவயவங்களை பிரதிஷ்டை செய்து ஜெபிக்கவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு கூடவே "அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது. நானும் உலகத்திற்கு சிலுவையிலறையுண்டிருக்கிறேன். கிறிஸ்துவுடனே கூட சிலுவையிலறையுண்டிருக்கிறேன்; இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று எழுதினார். (கலாத். 5:24, 6:14, 2:20).

நாம் ஜெயம் கொண்டவர்களாய் விளங்க வேண்டுமென்று ஆவியானவர் விரும்புகிறார். ஆகவே பரலோகம் நம்மைப் பார்த்து அலறிச் சொல்லுகிறது "இச்சையினால் உனக்குக் கேடுண்டாக்கிக் கொள்ளாதே".

## 2. பாவத்தினால் வரும் கேடு:-

தேவ மகிமையை நம்மிலிருந்து இழக்கச் செய்யும் அடுத்த கேடு பாவம். பாவமும், சிற்றின்பங்களும் ஆத்துமாவை கொடூரமாய் தாக்குகிறது. "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). "பாவம் செய்கிற ஆத்துமா சாகவே சாகும்" (எசேக். 18:20). "பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்" (நீதி. 18:23). பாவம் எல்லா விஷங்களிலும் கொடிய விஷம் ஆகும். சாதாரண விஷம் சரீரத்தை மட்டுமே அழிக்கும். ஆனால் பாவம் என்கிற விஷமோ ஆவி, ஆத்துமா, சரீரத்தையே அழித்து முடிவில் நகரத்தில் தள்ளிவிடக்கூடும்.

உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசா. 59:2). ஆதாம் ஏவாளின் பாவங்கள் அவர்களை தேவனுக்கு முன்பாக நிற்கக் கூடாமல் செய்தது. தோட்டத்தின் விருட்சங்களுக்குள் போய் ஒளிந்து கொண்டார்கள். தேவ சமூகத்தின் சந்தோஷத்தை இழந்தார்கள். தங்கள் ஆளுகை அதிகாரத்தை இழந்தார்கள். தேவ சாயலை, தேவ ரூபத்தை இழந்தார்கள். தேவ மகிமையை இழந்தார்கள். அவர்கள்மேல் சாபங்கள் வந்தது. நோய்களும், வியாதிகளும் வந்தன. மரணம் அவர்களை ஆட்கொண்டது. தேவனுக்கு முன்பாக நிற்க முடியாமல் போனார்கள்.

மனிதன் படிப்படியாக பாவத்திற்குள் விழுகிறான். இச்சை கர்ப்பம் தரித்து பாவத்தைப் பிறப்பிக்கிறது. பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கிறது. முடிவில் பாதாளத்தில் தள்ளுகிறது. பாவம் பழக்கமாகி விடுவதற்குள் நாம் அதை ஆண்டவர் சமூகத்தில் அறிக்கை செய்து விட்டுவிடவேண்டும்.

தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக் காரும். அவைகள் என்னை ஆண்டுக்கொள்ள ஒட்டாதிரும்" என்று தாவீது ஜெபித்தார் (சங். 19:11,12).

இந்த வசனத்தைப் பாருங்கள். பாவத்தின் வளர்ச்சியை காணலாம். முதலாவது பிழைகள், இரண்டாவது மறைவான குற்றங்கள், மூன்றாவது துணிகரமான பாவங்கள், நான்காவது ஆண்டுகொண்டு அடிமையாக்கும் விளைவு. அநேகர் விளையாட்டுப்போல் சிகரெட் குடிக்கிறார்கள், மது அருந்துகிறார்கள், பின்பு அது பழக்கமாகிவிடுகிறது.

ஒருவனுடைய கூடாரத்திலே தன் முகத்தை மட்டும் உள்ளே வைக்க இடம் கொடுக்கவேண்டும் என்று அவனுடைய ஒட்டகம் கேட்டது. அவனும் இடம் கொடுத்தான். கொஞ்ச நேரத்திற்குள்ளெல்லாம் அது தலையை உள்ளே வைத்தது. முழங்கால்களை உள்ளே கொண்டு வந்தது. முடிவிலே அந்த ஒட்டகம் அவனை வெளியே உதைத்து தள்ளி கூடாரம் முழுவதையும் ஆட்கொண்டுவிட்டது. பாவமும் அப்படித்தான்.

சிலருடைய பாவங்கள் சிந்தனையிலே ஆரம்பிக்கிறது. கண்களின் இச்சையிலே வளர்கிறது. கொஞ்சம் இடம் கொடுத்துவிட்டால் போகப் போக அது இரட்சிப்பையும், ஆன்மீக சந்தோஷத்தையும் இழந்து போய்விடச் செய்கிறது. கர்த்தருக்கு முன்பாக நிற்க முடிவதில்லை.

சில கண்ணாடி சிம்னிகள் பார்க்க அழகாக இருக்கும். நல்லதாக காட்சியளிக்க கூடும். ஆனால் அதில் ஒரு சிறு கீறல் விழுந்துவிட்டால் விளக்கேற்றுவதற்காக பயன்படுத்தமுடியாது. பயன்படுத்துவோமானால் அது உடைந்து சிதறிவிடும். அதுபோலவே சிறுபாவமும் நாம் கர்த்தருக்கு முன்பாக நிற்கக்கூடாதபடி மகிமை இழக்கச் செய்துவிடும்.

**- V. G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ ஏப்ரல் 2021

| | | |
|---|---|---|
| 01-04-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Aspin Bejo |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Victor Thaya singh |
| 09-04-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Ashikha Joel |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. C. A. Vinu |
| 16-04-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Baby Raja Kumari |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Vinobha |
| 23-04-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Boopathi Baskar |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Alex Baskar |
| 30-04-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Miss. Britny Jenkin Raj |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Austin Daniel Raj |
| 07-05-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Binitha Pratheesh |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Arun Paul |

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 01-04-2021 | வியாழன் - அருணோதய ஆராதனை |
| 01-04-2021 | வியாழன் - வியாகுல வியாழன் ஆராதனை |
| 02-04-2021 | வெள்ளி – புனித வெள்ளி ஆராதனை |
| 04-04-2021 | ஞாயிறு – உயிர்த்தெடுதல் பண்டிகை ஆராதனை |
| 09-04-2021 | வெள்ளி ஆராதனை |
| 16-04-2021 | வெள்ளி ஆராதனை |
| 23-04-2021 | வெள்ளி ஆராதனை |
| 30-04-2021 | வெள்ளி ஆராதனை |
| 01-05-2021 | சனி – அருணோதய ஆராதனை |

## ஏப்ரல் 2021 மாத கேள்விகள்

### (கொலோசெயர், 1, 2 தெசலோனிக்கேயர் முழுவதும்)

1. மார்க்கவசம் எது?
2. எதில் சோர்ந்து போகக்கூடாது?
3. யுஸ்துவின் மறுபெயர் என்ன?
4. பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியம் எது?
5. தெசலோனிக்கேயர் சபையாரிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் எங்கு தொனித்தது?
6. எது இருதயங்களில் ஆளக்கடவது?
7. அவனவன் தன் எதை பரிசுத்தமாயும், கனமாயும் ஆண்டுக்கொள்ள வேண்டும்?
8. தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைபவன் யார்?
9. இயேசுவின் இரத்தத்தினாலே நமக்கு என்ன உண்டாயிருக்கிறது?
10. எதை அற்பமாய் எண்ணக்கூடாது?
11. கிறிஸ்துவுக்குள் அடங்கியுள்ள பொக்கிஷங்கள் எவை?
12. யாருக்கு முன்பாக ஞானமாய் நடக்கவேண்டும்?
13. வேலை செய்ய மனதில்லாதிருந்தால் என்ன செய்யக்கூடாது?
14. தெசலோனிக்கேயர் சபைக்கு அனுப்பப்பட்ட தேவஊழியக்காரன் யார்?
15. வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கு எது பிரசங்கிக்கப்படுகிறது?
16. கர்த்தருடைய நாள் எவ்விதமாய் வருகிறது?
17. யார்மேல் தேவகோபாக்கினை வரும்?
18. கர்த்தர் ஆரவாரத்தோடு வரும்போது யார் முதலாவது எழுந்திருப்பார்கள்?
19. லூக்காவின் வேலை என்ன?
20. பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பது யாருடைய சித்தமாயிருக்கிறது?

## மார்ச் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. பண ஆசை – 1தீமோ. 6:10
2. தேவனுடைய வீடு – 1தீமோ. 3:15

3. கன்னானாகிய அலெக்சந்தர் - 1தீமோ. 4:14
4. ஒநேசிப்போரு – 2தீமோ. 1:16
5. கிறிஸ்து இயேசு – 1தீமோ. 2:6
6. சரீர முயற்சி – 1தீமோ. 4:8
7. யந்நேயும் யம்பிரேயும் - 2தீமோ. 3:8
8. நித்திய ஜீவன் - 1தீமோ. 6:12
9. ஸ்திரீயானவள் - 1தீமோ. 2:11,12
10. வேலையாள் - 1தீமோ. 5:18
11. கார்ப்பு – 2தீமோ. 4:13
12. தேவ ஆவியினால் - 2தீமோ. 3:16
13. கண்காணிப்பை விரும்புகிறவன் - 1தீமோ. 3:1
14. சுகபோகமாய் வாழ்கிறவள் - 1தீமோ. 5:6
15. ஐனிக்கேயாள் - 2தீமோ. 1:5
16. மாம்சத்திலே – 1தீமோ. 3:16
17. மாறுபாடான தர்க்கங்கள் - 1தீமோ. 6:5
18. பிரயாசப்பட்டு பயிரிடுகிறவன் - 2தீமோ. 2:6
19. கட்டுக்கதைகள் - 1தீமோ. 4:7
20. இமெனேயும் அலெக்சந்தரும் - 1தீமோ. 1:20

## மார்ச் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Mary Praveena Gobinath |
| Mrs. Aspin Bejo | Mrs. Nisha Rajan |
| Mrs. Boopathi Baskar | Mrs. Percy Jean |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Priyadarsini Kanagavel |
| Mrs. Felsi Rani John | Mrs. Pushpa Rani Moorthy |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Josephin Anto Kingston | Mrs. Shiney Johan |
| Mrs. Juslin Jaslin | Mrs. Thamari Johnson |
| Mrs. Leela Gladson | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Manju Martin | Mrs. Virgin Jegatha Jino |

## ஏப்ரல் 2021 மாத கேள்விகள்

## (ஏசாயா 11-20 முடிய)

1. கிருபையினாலே எது ஸ்தாபிக்கப்படும்?
2. கர்த்தருடைய கரத்தின் கிரியை யார்?
3. பாம்பின் வேரிலிருந்து எது தோன்றும்?
4. கர்த்தரின் நாமம் தங்கும் ஸ்தலம் எது?
5. கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருப்பது எது?
6. வயல்கள் வாடிப் போன ஊர் எது?
7. பாழான மாளிகைகளில் எது ஊளையிடும்?
8. எந்த பட்டணத்தின் பிரபுக்கள் மூடர்கள்?
9. பிரபுக்களின் வாசல்களுக்குள் பிரவேசிக்க என்ன செய்யவேண்டும்?
10. அசீரியா ராஜாவாகிய சர்கோனாலே அஸ்தோத்தின் மேல் யுத்தம்பண்ண அனுப்பப்பட்டவன் யார்?
11. எந்த நகரம் பாழான மண்மேடாகும்?
12. அதிகாலையின் மகன் யார்?
13. பெலனும் கீதமுமானவர் யார்?
14. அறுப்புக்காலத்து உஷ்ணத்தில் என்ன உண்டாகும்?
15. ஒருபோதும் பேர்பெறாத சந்ததி எது?
16. மூன்றாவதாக பூமியின் நடுவில் ஆசீர்வாதமாயிருக்கும் பட்டணம் எது?
17. கல்தேயருடைய பிரதான மகிமை எது?
18. நியாயம் விசாரித்து நீதிசெய்கிறவர் எங்கு வீற்றிருப்பார்?
19. அரைக்கட்டும், இடைக்கச்சையுமாயிருப்பது எது?
20. ஆர், கீர் பட்டணங்கள் எங்கிருக்கிறது?

## மார்ச் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. ஆசாரியனான உரியா – ஏசா. 8:2
2. கிபியா – ஏசா. 10:29
3. பெலிஸ்தர் - ஏசா. 2:6

4. அக்கிரமம் - ஏசா. 5:18

5. யாக்கோபுக்கு – ஏசா. 9:8

6. ரேத்சீன் - ஏசா. 7:8

7. மனம்பொருந்திச் செவிகொடுக்கும்போது – ஏசா. 1:19

8. ஓரேப் - ஏசா. 10:26

9. நெருப்புத் தழலால் - ஏசா. 6:6-7

10. சீலோவாவின் - ஏசா. 8:6

11. காவல் - ஏசா. 4:5

12. எருசலேமிலிருந்து – ஏசா. 2:3

13. ஆகாமியம் - ஏசா. 9:17

14. யூதாவின் மனுஷர் - ஏசா. 5:7

15. கல்னோ பட்டணம் - ஏசா. 10:9

16. பெக்கா என்னும் இஸ்ரவேலின் ராஜா – ஏசா. 7:1

17. பராக்கிரமசாலி – ஏசா. 1:31

18. பெரிய வெளிச்சத்தை – ஏசா. 9:2

19. மகத்துவமானவராலே – ஏசா. 10:34

20. மகேர்-சாலால்-அஷ்-பாஸ் - ஏசா. 8:1

## மார்ச் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Justus Martin |
| Mr. Anand | Mr. Kanagavel |
| Mr. Anu | Mr. Lenin Raj |
| Mr. Bejo Nelson | Mr. Prince J. P. |
| Mr. Daniel Raj P. | Mr. Rajan V. N. |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Ramesh R. |
| Mr. Jean C. R. Shibin | Mr. Robin Devadhas |
| Mr. Jino John | Mr. Sujith Gladson |
| Mr. Johan Pratheep | |

May God Bless All

## Birthday Celebrants – April 2021

| | |
|---|---|
| 04th April | Mr. Nickson, S/o Mr. David Sundar Sing |
| 04th April | Mrs. Selva Angel, W/o Mr. Mohan Babu |
| 04th April | Mr. Dhinakaran |
| 05th April | Mrs. M. Latha, W/o Mr. George |
| 05th April | Miss. Ancio Broose, D/o Mr. Jegan Broose |
| 07th April | Mr. T. Raju |
| 08th April | Master. Daulton Ziegan Isaac, S/o Mr. Isaac Solomon |
| 09th April | Mr. P. Bino Vetha Raja Singh |
| 10th April | Mrs. Eunice Beulah Suganthi, W/o Mr. Isaac Solomon |
| 10th April | Mrs. Jancy Deepa, W/o Mr. Victor Johnslin |
| 10th April | Mr. M. Ramesh |
| 11th April | Master. Joshua, S/o Mr. T. Raju |
| 11th April | Mrs. Vijayakumari, W/o Mr. Devaraj |
| 11th April | Miss. Anlin Mathney, D/o Mr. Anto Kingston |
| 11th April | Mr. M. Berkins |
| 12th April | Mrs. Felicia Daisy, W/o Mr. Lordson |
| 12th April | Mr. Prem Vijins Gabriel |
| 12th April | Mrs. Reni Thresia, W/o Mr. C. A. Vinu |
| 13th April | Mr. Mayshack |
| 13th April | Mrs. Sabitha, W/o Mr. Jebastin |
| 13th April | Mr. J. Selvamani |
| 13th April | Master. Jacob Derin, S/o Mr. Nalam Dimalson |
| 14th April | Miss. Jeena Jones, D/o Mr. Jones |
| 14th April | Master. Kevin John, S/o Mr. A. Rajasingh |

| | |
|---|---|
| 14th April | Mr. Ashok Rajasekaran |
| 17th April | Mr. Livingston |
| 17th April | Miss. Jolene Arianna, D/o Mr. Joel |
| 18th April | Mr. C.A. Vinu |
| 18th April | Mr. Michael |
| 18th April | Master. Danny J Sathya, S/o Mr. Jerry Sathya |
| 19th April | Mr. S. Siva Kumar |
| 19th April | Miss. Jeniffer Riya Anu, D/o Mr. Anu |
| 20th April | Mrs. Sobiya Kumari, W/o Mr. Venil Singh |
| 21st April | Mrs. Felsi Rani, W/o Mr. John Jacob |
| 23rd April | Mrs. Gracelin Rani, W/o Mr. Bensam |
| 23rd April | Mrs. Paulin Shabila, W/o Mr. Gnanadhas |
| 23rd April | Master. V. J. Jalin Lino, D/o Mr. Victor Johnslin |
| 24th April | Mr. Nelson |
| 25th April | Miss. V.J. Shaolin Lina D/o Mr. Victor Johnslin |
| 26th April | Mr. R. Sunil |
| 26th April | Master A. Garisht Ruhan S/o Atheesh Joy |
| 27th April | Miss. Arifny Cratford Jenkin, D/o Mr. Jenkin Raj |
| 30th April | Mrs. Shakina, W/o Mr. Prem Vijins |

## Wedding day Anniversaries – April 2021

| | |
|---|---|
| 02nd April | Mr. Broosewelt & Mrs. Nisha |
| 03rd April | Mr. Jose Chandra Bose & Mrs. Jeya Selvi |
| 06th April | Mr. C. Stalin & Mrs. Sheeba |
| 06th April | Mr. C.A. Vinu & Mrs. Reni Thresia |
| 13th April | Mr. Mohan Babu & Mrs. Selva Angel |
| 16th April | Mr. Prem Meshach & Mrs. Shiney Vasica |
| 22nd April | Mr. J. Gnanadhas & Mrs. Paulin Shabila |

# ஜெபிக்க சில குறிப்புகள்

## திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.

2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.

3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.

5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.

2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.

3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.

4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.

5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.

2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.

3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.

5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. **வருகிற நாட்களில் நடைபெறும் தேர்தல்களுக்காகவும், நல்ல தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவும் ஜெபிப்போம்.**

2. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.
3. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.
4. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.
5. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.
2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.
3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.
4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.
5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

# சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ் மற்றும உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இறைவேண்டல் குறிப்புகள்:-**

1. கொரோனா மற்றும் உருமாறிய கொரோனா வைரஸின் வீரியம் செயல் இழந்து முழுமையாக அழிக்கப்படவும்.....
2. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முழுமையான விடுதலை பெறவும்.....
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த பயம் அகன்றிடவும்......
4. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் பரவாமலிருக்கவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு கொடுக்கவும்......
5. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
6. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய்க்கு எதிராக அரசு மேற்க்கொள்ளும் முயற்சிகள் வாய்க்கவும்......
7. மருத்துவமனையில் பணிசெய்கிற ஊழியர்களுக்காகவும் (Doctors, Nurses மற்றும் அனைத்து உதவி பணியாளர்களுக்காகவும்) மற்றும் சுகாதர துறையில் பணிசெய்கிற அனைத்து பணியாளர்களுக்காகவும்...
8. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....

குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்! இனிய வாழ்வு பெறுவோம்!!**

# அனுதின மன்னா – ஏப்ரல் 2021

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 1 | வியாழன் | மத். 26:17-30 | மத். 26:26 | 2சாமு. 14-15 |
| **ஏப்ரல் 2** | **வெள்ளி** | **மத். 27:45-56** | **மத். 27:50** | **2சாமு. 16-18** |
| ஏப்ரல் 3 | சனி | மத். 27:57-61 | மத். 27:60 | 2சாமு. 19:20 |
| ஏப்ரல் 4 | ஞாயிறு | மத். 28:1-10 | மத். 28:6 | 2சாமு. 21-22 |
| ஏப்ரல் 5 | திங்கள் | 2இரா. 18:1-12 | 2இரா. 18:6 | 2சாமு. 23-24 |
| ஏப்ரல் 6 | செவ்வாய் | 1நாளா. 5:18-22 | 1நாளா. 5:20 | 1இரா. 1-2 |
| ஏப்ரல் 7 | புதன் | ஏசா. 12:1-6 | ஏசா. 12:2(a) | 1இரா. 3-5 |
| ஏப்ரல் 8 | வியாழன் | ஏசா. 51:1-8 | ஏசா. 51:5 | 1இரா. 6-7 |
| **ஏப்ரல் 9** | **வெள்ளி** | **எரேமி. 31:1-5** | **எரேமி. 31:2** | **1இரா. 8-9** |
| ஏப்ரல் 10 | சனி | எரேமி. 31:7-12 | எரேமி. 31:11 | 1இரா. 10-12 |
| ஏப்ரல் 11 | ஞாயிறு | யோவா. 20:24-29 | யோவா. 20:29 | 1இரா. 13-15 |
| ஏப்ரல் 12 | திங்கள் | ஆதி. 32:22-32 | ஆதி. 32:28 | 1இரா. 16-18 |
| ஏப்ரல் 13 | செவ்வாய் | அப். 9:1-18 | அப். 9:6(a) | 1இரா. 19-20 |
| ஏப்ரல் 14 | புதன் | ரோமர் 1:1-12 | ரோமர் 1:7 | 1இரா. 21-22 |
| ஏப்ரல் 15 | வியாழன் | யோவா. 4:21-30 | யோவா. 4:29 | 2இரா. 1-3 |
| **ஏப்ரல் 16** | **வெள்ளி** | **சங். 37:25-31** | **சங். 37:28(a)** | **2இரா. 4:5** |
| ஏப்ரல் 17 | சனி | சங். 91:1-12 | சங். 91:10 | 2இரா. 6:8 |
| ஏப்ரல் 18 | ஞாயிறு | யோவா. 21:1-14 | யோவா. 21:6 | 2இரா. 9:11 |
| ஏப்ரல் 19 | திங்கள் | ரூத் 2:1-12 | ரூத் 2:12 | 2இரா. 12:14 |
| ஏப்ரல் 20 | செவ்வாய் | ஏசா. 49:8-13 | ஏசா. 49:13 | 2இரா. 15:17 |
| ஏப்ரல் 21 | புதன் | 2தீமோ. 4:9-18 | 2தீமோ. 4:18 | 2இரா. 18:20 |
| ஏப்ரல் 22 | வியாழன் | 2தீமோ. 3:10-17 | 2தீமோ.3:14(a) | 2இரா. 21-23 |
| **ஏப்ரல் 23** | **வெள்ளி** | **எபி. 6:13-20** | **எபி. 6:15** | **2இரா. 24-25** |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 24 | சனி | யாக். 2:14-26 | யாக். 2:23 | 1நாளா. 1-2 |
| ஏப்ரல் 25 | ஞாயிறு | லூக். 24:13-35 | லூக். 24:31 | 1நாளா. 3:5 |
| ஏப்ரல் 26 | திங்கள் | ஏசா. 25:1-9 | ஏசா. 25:9 | 1நாளா. 6:7 |
| ஏப்ரல் 27 | செவ்வாய் | சங். 126:1-6 | சங். 126:3 | 1நாளா. 8:10 |
| ஏப்ரல் 28 | புதன் | சங். 40:1-12 | சங். 40:11 | 1நாளா. 11-13 |
| ஏப்ரல் 29 | வியாழன் | ஓசி. 14:1-9 | ஓசி. 14:5 | 1நாளா. 14-16 |
| ஏப்ரல் 30 | வெள்ளி | 2கொரி. 1:3-11 | 2கொரி. 1:6(b) | 1நாளா. 17-20 |
| மே 1 | சனி | ஏசா. 65:17-25 | ஏசா. 65:23 | 1நாளா. 21-23 |
| மே 2 | ஞாயிறு | யோவா. 11:17-28 | யோவா. 11:25 | 1நாளா. 24-26 |
| மே 3 | திங்கள் | நீதி. 22:17-29 | நீதி. 22:29 | 1நாளா. 27-29 |
| மே 4 | செவ்வாய் | நீதி. 24:21-34 | நீதி. 24:27 | 2நாளா. 1-4 |
| மே 5 | புதன் | மாற். 13:31-37 | மாற். 13:34 | 2நாளா. 5-7 |
| மே 6 | வியாழன் | உபா. 14-22-29 | உபா.14:29 © | 2நாளா. 8-11 |
| மே 7 | வெள்ளி | 2தெச 3:6-15 | 2தெச. 3:10 | 2நாளா. 12-16 |

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).

# வாழ்த்துகிறோம்!

பத்து ஆண்டுகளை சிறப்பாக நிறைவு செய்து பதினொன்றாம் ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் **“பாலைவன மன்னா”** தொடர்ந்து சிறப்புடன் வெளிவர வாழ்த்துகிறோம்!

# நன்றி!!

**பாலைவன மன்னா**–விற்கு தங்கள் படைப்புகளையும் உதவிகளையும் தந்தவர்களுக்கும் மற்றும் வாசகர்களுக்கும் திருச்சபையின் சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்!

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**